| UG-C-130 | BTMAL - 11 |
|---|---|

**B.A/BLT.DEGREE EXAMINATION DECEMBER – 2020**

**தமிழ்**

**முதலாம் ஆண்டு**

**தமிழக வரலாறும் பண்பாடும்**

Time : 3 Hours Maximum Marks : 75

பகுதி – அ (10x1=10)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில் விடை தருக.

1. தமிழக வரலாற்றினை அறிய உதவும் சான்றுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. பண்டைய தமிழகத்தின் எல்லைகள் யாவை?
3. சிந்துவெளி நாகரிகத்தின் காலத்தை எழுதுக.
4. களப்பிரர்கள் எத்தனை நூற்றாண்டுகள் தமிழகத்தை ஆண்டனர்?
5. தமிழ்நாட்டில் பல்லவ பேரரசை தோற்றுவித்த அரசன் யார்?
6. பல்லவர் கால கட்டடக் கலைக்கு இரண்டு சான்றுகள் தருக.
7. பிற்கால சோழப் பேரரசை தோற்றுவித்த அரசன் யார்?
8. பிற்கால சோழர் ஆட்சியில் எழுப்பப்பட்ட கோவில்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. பிற்காலப் பாண்டிய மன்னர்கள் இருவரைக் குறிப்பிடுக.
10. விஜயநகரப் பேரரசை தோற்றுவித்தவர்கள் யார்?
11. நாயக்கர் ஆட்சியில் தமிழகம் எத்தனை பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது?
12. நுாயக்கர் கால கட்டடக் கலைக்கு இரண்டு சான்றுகள் தருக.
13. தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்திய ஐரோப்பியர்களைப் பட்டியலிடுக.
14. வேலூர் புரட்சி நடைபெற்ற ஆண்டு எது?
15. மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட ஆண்டு எது?

பகுதி – ஆ

(10x1=10)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. துமிழகத்தின் நில அமைப்பினையும் அதற்குரிய திணைப்பெயரையும் எழுதுக.
17. கடையெழு வள்ளல்களின் பெயர்களை எழுதுக.

18. துமிழகத்தின் இருண்டகாலம் எது? ஏன்?
19. பல்லவ அரசன் நரசிம்மவா்மன் குறித்து எழுதுக.
20. சாளுக்கியச் சோழா்கள் யாா் என்பதை எழுதுக.
21. தமிழ்நாட்டை ஆண்ட விசயநகர மன்னா்களைக் குறிப்பிடவும்.'.
22. தமிழ்நாட்டைச் சோ்ந்த விடுதலைப் போராட்ட வீராங்கனைகள் சிலரைக் குறிப்பிடுக.

பகுதி - இ (5x5=25)

23. சங்ககாலத் தமிழரின் வாணிகம் குறித்து விளக்குக.
24. சிந்துவெளி நாகரிகம் குறித்து விளக்குக.
25. களப்பிரா் கால தமிழகத்தின் நிலையை விளக்குக.
26. பிற்கால சோழா்களின் தோற்றமும் வளா்ச்சியும் குறித்து விளக்குக.
27. பிற்கால பாண்டியா்களின் தோற்றமும் வளா்ச்சியும் குறித்து விளக்குக.
28. விஜயநகரப் பேரரசு கால தமிழக நிலையை விளக்குக.
29. தமிழ்நாட்டில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் குறித்து விளக்குக.

பகுதி - ஈ
(3x10=30)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடை தருக.

30. சங்ககாலத் தமிழகம் குறித்து விவாி.
31. பல்லவா் காலத்துக் கலை இலக்கிய வளா்ச்சி குறித்து கட்டுரை ஒன்றினை எழுதுக.
32. பிற்கால சோழா் ஆட்சியில் தமிழ்ச்சமூகம் குறித்து விளக்கியெழுதுக.
33. நாயக்கா் கால அரசியலும் பண்பாடும் குறித்து கட்டுரை ஒன்றினை எழுதுக.
34. விடுதலைப் போரில் தமிழகம் குறித்து விவாி எழுதுக.

# B.A/BLT.DEGREE EXAMINATION DECEMBER – 2020
## Tamil
## முதலாம் ஆண்டு

### தமிழக வரலாறும் பண்பாடும்

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள் : 70**

### பகுதி - அ (3x3= 9 மதிப்பெண்கள்)

எவையேனும் **மூன்று வினாக்களுக்கு** மட்டும் 100 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

1. "வரலாறு" என்றால் என்ன? விளக்குக.
2. "சங்ககாலம்" விளக்குக.
3. களப்பிரர் என்பவர் யார்? விளக்குக.
4. சோழர்கள் - குறிப்பு வரைக.
5. மருது சகோதரர்கள் பற்றி எழுதுக.

### பகுதி - ஆ (3x7= 21 மதிப்பெண்கள்)

எவையேனும் **மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களுக்கு மிகாமல்** விடை தருக.

6. சிந்துவெளி நாகரீகமும் ஆரிய நாகரீகமும் பற்றி எழுதுக.
7. சங்ககால பண்பாடு, பழக்க வழக்கங்கள் குறித்து விளக்குக.
8. பல்லவர்காலத்து நீர்ப்பாசன வசதிகள் குறித்து எழுதுக.
9. முதலாம் ராஜராஜனின் போர்கள் குறித்து விளக்குக.
10. திராவிட இயக்கங்கள் குறித்து எழுதுக.

### பகுதி - இ (4x10= 40 மதிப்பெண்கள்)

எவையேனும் **நான்கனுக்கு மட்டும் 500 சொற்களுக்கு மிகாமல்** விடை தருக.

11. தமிழக வரலாற்றினைஅறிவதற்கான சான்றுகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.
12. பண்டைய தமிழரின் அயல்நாட்டுத் தொடர்புகள் பற்றி விவரி.
13. பல்லவர் கால சமுதாயம் பற்றி விவரித்தெழுதுக.
14. சாளுக்கியச் சோழர்களின் ஆட்சிமுறை குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.
15. பாண்டியர்களின் உள்நாட்டுப் போருக்கான முக்கியக் காரணங்கள் யாவை? விவரி.
16. விஜயநகர பேரரசின்கீழ் தமிழக சமூக அரசியல் சூழலை விவரி.
17. விடுதலை பெற்ற தமிழகத்தின் சமூக, அரசியல், பொருளாதார நிலைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

| | |
|---|---|
| UG-C-135 | BTM- 31 |

# B.A./B.LIT. DEGREE EXAMINATION - DECEMBER - 2020
# TAMIL
## மூன்றாம் ஆண்டு
## சங்க இலக்கியம்

**Time : 3 Hours** **Maximum Marks : 75**

### பகுதி - அ (10x1= 10 மதிப்பெண்கள்)

எவையேனும் **பத்து வினாக்களுக்கு** மட்டும் **ஓரிரு சொற்களில்** விடை தருக.

1. தலைமகனின் இயல்பான பண்புகளாகத் தொல்காப்பியம் எவற்றைச் சுட்டுகிறது?
2. நற்றிணையைத் தொகுப்பித்தவன் பெயர் யாது?
3. நாரை தாய் பயிர் பிள்ளைக்கு எதனைத் தந்தது?
4. குறுந்தொகையைத் தொகுத்தவர் யார்?
5. பதிற்றுப்பத்தை முதன்முதலில் பதிப்பித்தவர் யார்?
6. பரிபாடல் செய்திகள் அனைத்தும் எந்த நாட்டைப் பற்றியது?
7. "மா அயோயே" எனத் தொடங்கும் பாடலை இயற்றியவர் யார்?
8. "அருள் குடையாக அறம் கோலாக" என்பதில் அமைந்துள்ள அழகு யாது?
9. முல்லைக் கலியைப் பாடியவர் யார்?
10. "குரவை" என்பது யாது?
11. அகநானூற்றில் மிகுதியான பாடல்களைப் பாடிய புலவர் யார்?
12. மாமூலனார் எந்த குறுநில மன்னனைப் பாடியுள்ளார்?
13. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
14. யார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர்?
15. சிறுபாணாற்றுப்படையைப் பாடிய புலவர் யார்?

### பகுதி - ஆ (5x2= 10 மதிப்பெண்கள்)

எவையேனும் **ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில்** விடை தருக.

16. "உள்ளுறை" என்றால் என்ன?
17. பதிற்றுப்பத்தில் பரணர் குட்டுவனைக் "கல்லா வாய்மையன்" என்றது ஏன்?
18. தீயினுள்ளும் பூவினுள்ளும் திருமால் யாதாகி இருக்கிறான்?
19. "இருங்கழி முதலை மேஎந்தோல் அன்ன" விளக்கம் தருக.
20. புன்னைத் தடவுநிலை மாச்சினைப் புள்ளிறை கூரும்" இவ்வரியில் இடம்பெற்ற இறைச்சிப் பொருள் யாது?

21. திருக்குறள் - குறிப்பு வரைக

22. நல்லியக் கோடனின் கோலும், வேலும் எத்தன்மையன?

## பகுதி - இ (5x5= 25 மதிப்பெண்கள்)

எவையேனும் **ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில்** விடை தருக.

23. நற்றிணைப் பாடல் வழி தலைவன் தலைவி பிரிவின் கொடுமை குறித்து விளக்குக.
24. "உள்ளுறை" என்பதை நும்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள குறுந்தொகைப் பாடல் ஒன்றின்வழி விளக்குக.
25. ஒழுக்கமுடைமை குறித்து வள்ளுவர் கூறுவன யாவை? விளக்குக.
26. "சேரன் குட்டுவன் வணங்கா ஆண்மையன்" என்பதை புலவர் எவ்வாறு விளக்குகிறார்?
27. பரிபாடலின் சிறப்புகள் குறித்து எழுதுக.
28. கலித்தொகைப் பாடல்வழி அறத்தொடு நிற்றலை விளக்குக.
29. முல்லைக்கலிப் பாடல்களில் இடம்பெற்றுள்ள புராணச் செய்திகள் குறித்து எழுதுக.

## பகுதி - ஈ (3x10= 30 மதிப்பெண்கள்)

எவையேனும் **மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில்** விடை தருக.

30. பெருங்கடுங்கோவின் அகநானூற்றுப் பாடல் மூலம் தலைமக்களின் உணர்வு நிலைகளை விளக்குக.
31. செங்குட்டுவனின் வீரத்தையும், கொடையையும் பதிற்றுப்பத்துப் பாடல்வழிப் புலப்படுத்துக.
32. முல்லைக்கலி உணர்த்தும் ஆயர் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் விவரி.
33. பரிபாடல் உணர்த்தும் திருமாலின் பெருமைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.
34. வள்ளுவர் கூறும் அறச்செய்திகளைத் தொகுத்தெழுதுக.

# B.A./B.LIT. DEGREE EXAMINATION DECEMBER - 2020

## TAMIL
## மூன்றாம் ஆண்டு

### இலக்கணம் 3: யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம்

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள்: 75**

**பகுதி - அ** **(10x1= 10 மதிப்பெண்கள்)**

எவையேனும் **பத்து வினாக்களுக்கு** மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. குறுகிய மூவுயிர்கள் யாவை?
2. சீர்கள் எத்தனை வகைப்படும்?
3. தளை எத்தனை வகைப்படும்?
4. நேரிசை வெண்பாவின் வகைகள் யாவை?
5. குறள் வெண்பாவின் இனங்கள் யாவை?
6. ஆசிரிய விருத்தம் என்பது யாது?
7. வனப்பு எத்தனை வகைப்படும்?
8. வைதருப்ப நெறி எத்தனை வகைப்படும்?
9. அளவடி என்றால் என்ன?
10. முத்தகம் என்றால் என்ன?
11. அழகுபெறா எழுத்துக்கள் யாவை?
12. இலேச அணியின் வகைகள் யாவை?
13. கருத்தா, கருமம், கருவி ஆகிய மூன்றின் காரணமாகத் தோன்றும் அணி எது?
14. ஒட்டணி எத்தனை வகைப்படும்?
15. ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ பின்னர்ப் பலவிடுத்தும் வரும் அணி எது?

**பகுதி - ஆ** **(5x2= 10 மதிப்பெண்கள்)**

எவையேனும் **ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில்** விடை தருக.

16. அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்கள் எவையெவை?
17. கலிப்பாவின் பொது இலக்கணம் யாது?
18. கலிவெண்பாவின் இலக்கணம் யாது?
19. சிறப்பில்லாத மோனைகள் எவையெவை?
20. கூன் என்றால் என்ன?
21. உருவக அணியின் வகைகளை எழுதுக.
22. அதிசயவணியின் வகைகளை எழுதுக.

**பகுதி - இ** **(5x5= 25 மதிப்பெண்கள்)**

எவையேனும் **ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில்** விடை தருக.

23. அசையின் வகைகள் குறித்து விளக்குக.
24. ஆசிரியப்பாவின் இனங்கள் பற்றி எழுதுக.
25. சிறப்பில்லா எதுகைகள் குறித்து விளக்குக.
26. பெருங்காப்பிய இலக்கணம் யாது? விளக்குக.
27. தன்மை அணியின் வகைகள் குறித்து எழுதுக.
28. பின்வருநிலை அணி பிற அணிகளுடன் கூடிவருமாற்றை விளக்குக.
29. வேற்றுமை அணி பிற அணிகளுடன் கூடி வருமாற்றை எழுதுக.

**பகுதி - ஈ** **(3x10= 30 மதிப்பெண்கள்)**

எவையேனும் **மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில்** விடை தருக.

30. சீர்கள் குறித்து விவரித்தெழுத்து
31. வெண்பாவின் இலக்கணம் யாது? அதன் வகைகள் குறித்து எழுதுக.
32. எண்வகை வனப்புகள் பற்றி கட்டுரை ஒன்றினை எழுதுக.
33. பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகள் குறித்து விவரி.
34. உவமை குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

| UG-C-137 | BTM- 33 |
|---|---|

# B.A./B.LIT. DEGREE EXAMINATION - DECEMBER - 2020
## TAMIL
## மூன்றாம் ஆண்டு

தமிழ் மொழி வரலாறும் தமிழ் இலக்கிய வரலாறும்

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள்: 75**

**பகுதி - அ** **(10x1= 10 மதிப்பெண்கள்)**

எவையேனும் **பத்து வினாக்களுக்கு** மட்டும் **ஓரிரு சொற்களில்** விடை தருக.

1. "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் நூலை எழுதியவர் யார்?
2. "ற" கரக் கிளைமொழி எனப்படுவது எது?
3. பதிலீடு பெயர்கள் என்றால் என்ன?
4. குறிஞ்சித் திணையின் சிறுபொழுது யாது?
5. நீதி நூல்களுள் காலத்தால் முற்பட்டது எது?
6. தனித்தமிழ் இயக்க முன்னோடிகள் யார்?
7. பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் யார்?
8. பத்துப்பாட்டை முதன்முதலில் பதிப்பித்தவர் யார்?
9. ஏலாதியின் ஆசிரியர் யார்?
10. பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினைப் பாடிய புலவர் யார்?
11. இன்றைய மாற்றிலக்கணதத்தின் தந்தை யார்?
12. தமிழில் முதன்முதலில் ஒப்பிலக்கியம் பற்றி நூல் எழுதியவர் யார்?
13. கண்ணகியின் கதையை இளங்கோவடிகளுக்கு கூறியவர் யார்?
14. இறையனார் களவியலுக்கு உரையெழுதியவர் யார்?
15. நெஞ்சுவிடு தூது இயற்றியவர் யார்?

**பகுதி - ஆ** **(5x2= 10 மதிப்பெண்கள்)**

எவையேனும் **ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில்** விடை தருக.

16. தமிழ்மொழி வரலாற்றுச் சான்றுகள் யாவை?
17. அறிவியல் தமிழ் என்றால் என்ன?
18. கிளைமொழி என்றால் என்ன?
19. ஐந்திணைகள் எவை?
20. திரிகடுகம் - விளக்கம் தருக.
21. ஆற்றுப்படை என்றால் என்ன?
22. பரணியின் பாடுபொருள் யாது?

**பகுதி - இ** **(5x5= 25 மதிப்பெண்கள்)**

எவையேனும் **ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில்** விடை தருக.

23. இன்றைய பேச்சுத் தமிழில் ஏற்பட்டுள்ள ஒலி மாற்றங்கள் குறித்து எழுதுக.
24. தென்திராவிட மொழிகளின் சிறப்பில்புகள் யாவை? விளக்குக.
25. ஊடகத்தமிழ் குறித்து விளக்குக.
26. சோழர் கால சைவ இலக்கியங்கள் குறித்து எழுதுக.
27. தொடரியல் பற்றி மரபிலக்கணங்கள் கூறுவனவற்றை விளக்குக.
28. திருக்குறளின் சிறப்புகள் பற்றி எழுதுக.
29. தமிழில் சிறுகதை இலக்கியங்களின் தோற்றம் குறித்து எழுதுக.

**பகுதி - ஈ** **(3x10= 30 மதிப்பெண்கள்)**

எவையேனும் **மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில்** விடை தருக.

30. தமிழ்மொழி வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் குறித்து விவரி.
31. தமிழில் நீதி இலக்கியங்கள் குறித்து விளக்கியெழுதுக.
32. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.
33. இடைக்காலப் புலவர்கள் குறித்து விவரி.
34. இலங்கைத் தமிழர்களின் தமிழ்ப்பணியினைப் புலப்படுத்துக.

| UG-C-138 | BTM- 34 |
|---|---|

**B.A./B.LIT. DEGREE EXAMINATION - DECEMBER - 2020**

**TAMIL**
**மூன்றாம் ஆண்டு**

*இலக்கியத் திறனாய்வும் படைப்பிலக்கியமும்*

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள் : 75**

**பகுதி அ (10x1= 10 மதிப்பெண்கள்)**

எவையேனும் **பத்து வினாக்களுக்கு** மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. இறையனார் களவியலுரை கூறும் கொள்கை யாது?
2. திறனாய்வின் இருவகைப் பணிகள் யாவை?
3. தொடக்க காலத்தில் உரைநடை எவ்வாறு இருந்தது?
4. உத்தியின் வகைகள் யாவை?
5. நூல் என்பதற்கு இணையாகத் தொல்காப்பியர் கூறும் மற்றொரு பெயர் யாது?
6. பழமொழியைத் தொல்காப்பியர் எவ்வாறு கூறுகிறார்?
7. சிற்றிலக்கியம் எத்தனை வகைப்படும் என்று பாட்டியலார் கூறுகின்றனர்?
8. மெய்யுணர்வு முறையில் விளக்குவதற்கேற்ற க.நா.சு. வின் நாவல் எது?
9. இலக்கண விதிக்கு மாறுபட அமைந்த திருமங்கையாழ்வாரின் இரு நூல்கள் யாவை?
10. கட்டடக் கலைக்கு உடனடியான சான்றாக அமைவன எவை?
11. இரசனைமுறைத் திறானய்வின் முதல்வர் யார்?
12. இலக்கியப் படைப்பாக்கம் எதன் வெளிப்பாடு?
13. தேவார காலத்தில் சிவன் கோயிலில் வழிபாட்டில் இடம்பெற்ற இசைக்கருவி எது?
14. ஓசை நயத்திற்கு உதவுபவை யாவை?
15. திரைக்கதைக்கு எது மிக அடிப்படையானது?

**பகுதி - ஆ (5x2= 10 மதிப்பெண்கள்)**

எவையேனும் **ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில்** விடை தருக.

16. இலக்கியம் என்பதற்கு நன்னூலார் கூறும் இலக்கணம் யாது?
17. கவிதைக்குரிய உத்திகள் யாவை?
18. சிறுகதை - குறிப்பு வரைக.
19. நாடகக் கூறுகள் யாவை?
20. நல்ல வாசகரின் இயல்பு யாது?

21. புனைகதை - விளக்கம் தருக.

22. ஒப்பீட்டு முறைத் திறனாய்வு - குறிப்பு வரைக.

**பகுதி - இ (5x5= 25 மதிப்பெண்கள்)**

எவையேனும் **ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில்** விடை தருக.

23. இலக்கிய வளர்ச்சி குறித்து விளக்குக.

24. சிறுகதைக்குரிய உத்திகள் யாவை? விளக்குக.

25. நாவல் இலக்கியத்தின் அடிப்படைக் கூறுகளை விளக்குக.

26. கலையின் பயன்கள் யாவை? விளக்குக.

27. கடித இலக்கியத்தின் தோற்றம் குறித்து எழுதுக.

28. திறனாய்வாளர் சிறப்புப் பண்புகள் பற்றி விளக்குக.

29. காட்சிப்படுத்துதல் விளக்குக.

**பகுதி - ஈ (3x10= 30 மதிப்பெண்கள்)**

எவையேனும் **மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில்** விடை தருக.

30. இலக்கிய வகைகள் குறித்து விவரித்தெழுதுக.

31. உரைநடை, நாடக இலக்கிய வகைகள் மற்றும் கூறுகள் பற்றி விவரி.

32. திறனாய்வு வகைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

33. புனைகதை படைத்தலின் அடிப்படைகள் குறித்து விவரி.

34. திறனாய்வின் நோக்கங்கள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

# B.A./B.LIT. DEGREE EXAMINATION DECEMBER - 2020

## TAMIL
## மூன்றாம் ஆண்டு
## நாட்டுப்புறவியல்

காலம் : மூன்று மணி மதிப்பெண்கள் : 75

பகுதி - அ (10x1= 10 மதிப்பெண்கள்)

எவையேனும் **பத்து வினாக்களுக்கு** மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.

1. நாட்டுப்புறவியலின் தந்தை என்றழைக்கப்படுபவர் யார்?
2. "பண்ணத்தி" என்று தொல்காப்பியர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
3. "ஆடுபாம்பே தெளிந்தாடு பாம்பே" என்று பாடிய சித்தர் யார்?
4. நாட்டுப்புறச் சகுனங்களில் ஏதேனும் ஒன்றினை எழுதுக.
5. மானிடவியல் என்பது எது?
6. மக்களிடையே முதன்முதலில் எவ்வழிபாடு தோற்றம் பெற்றது.?
7. ஆண்களாடும் கும்மியின் பெயர் என்ன?
8. மார்பிலே தொட்டில் கட்டி மடிமேல் நடை பழகியவள் யார்?
9. தொல்காப்பியம் கூறும் கதை வகைகள் எத்தனை?
10. நமக்கு கிடைத்த முதல் கதைப்பாடல் எது?
11. தொல்காப்பியம் விடுகதையை எவ்வாறு கூறுகின்றது?
12. "எந்த எழுத்து மணக்கும்" இவ்விடுகதையின் விடை யாது?
13. காவடியாட்டம் எந்தக் கடவுளோடு தொடர்புடையது?
14. உலகெங்கும் புகழ்பெற்ற பாய் எது?
15. பதினெட்டாம் பெருக்கு எந்த மாதத்தில் நடைபெறும்?

பகுதி - ஆ (5x2= 10 மதிப்பெண்கள்)

எவையேனும் **ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில்** விடை தருக.

16. விடுகதை - சிறுகுறிப்பு தருக.
17. பண்பாடு என்றால் என்ன?
18. குலவழிக் குறிமுறை என்றால் என்ன?
19. ஏற்றப்பாட்டு விளக்கம் தருக.
20. பச்சைக் குத்துதல் என்றால் என்ன?
21. "கண்ணேறு கழித்தல்" என்றால் என்ன?
22. நாட்டுப்புற மருத்துவம் - விளக்கம் தருக.

**பகுதி - இ** **(5x5= 25 மதிப்பெண்கள்)**

எவையேனும் **ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில்** விடை தருக.

23. நாட்டுப்புற இலக்கியத்தன் இயல்புகள் குறித்து எழுதுக.
24. நாட்டுப்புற மக்களிடையே காணப்படும் உறவுநிலை குறித்து விளக்குக.
25. வழிபாட்டின் தோற்றம் குறித்து எழுதுக.
26. தொழில் பாடல்களின் தன்மைகள் யாவை? விளக்குக.
27. கதைப்பாடலின் அமைப்பு குறித்து எழுதுக.
28. நாட்டுப்புற விளையாட்டுகளின் வகைகளை விளக்குக.
29. நாட்டுப்புற மருத்துவ முறைகள் குறித்து எழுதுக.

**பகுதி - ஈ** **(3x10= 30 மதிப்பெண்கள்)**

எவையேனும் **மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில்** விடை தருக.

30. தமிழக நாட்டுப்புறவியல் வரலாற்றினை விவரி.
31. நாட்டுப்புறவியலுக்கும் சமூகவியலுக்கும் உள்ள தொடர்பினைப் புலப்படுத்துக.
32. நாட்டுப்புற நம்பிக்கைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.
33. ஒப்பாரிப் பாடல்கள் பற்றி விவரி.
34. நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் கூறுகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.